சிவாஜி

ஞாயிறு வெளி

11-5-58

விலை 6 நயை.

SHIVAJI-WEEKLY

ஆசிரியர்கள்: திருலோக சீதாராம் ✧ அ.வெ.ர. கிருஷ்ணசாமி.

ஜோடி நடனம்.



ஆதியும் [illegible] முடிவிலா நடனமே இப்பெரும் படைப்பாய் விளங் [illegible]
பல்வே [illegible]

காலம்

ஒரு மரம்.

அரச மரம் அது.

வாழ்க்கை முள்ளில் சிக்கி ரத்தம் கக்கும் உள்ளம் போல, மோனத் துயரிலே மூழ்கி நின்று ஒவ்வொன்ருக இலையைச் சிந்திக் கொண்டிருந்தது. அவை தான் அது சிந்தும் கண்ணீர்த்துளிகளோ?

பகலிலும் இரவிலும், காற்றின் சலனத்திலும், அசைவற்ற நிலையிலும் சிந்தியது......இலைகளை உதிர்த்துக்கொண்டே நின்றது. முடிவில் காணப்பட்டது ஒரு மொட்டை மரம்.

காலையில் எழும் சூரியன் கதிர்க்கைகளால் அதன் கைகளை வானத்தை நோக்கி முறையிடும் கரங்களை தொட்டுத் தடவிச் சென்றது. மாலை நேரச் செஞ்ஞாயிற்றின் சோக ஒளியிலே, அதன் துக்கமய வாழ்வின் மோன உயிர்ப்பு, அதைச் சுற்றிச் செல்லும் காற்றில் கலந்தது. இராவேளை நிலவிலோ அம்மரம் 'பச்சைப்பசுங்கிளிக்கு மொட்டை அடித்து முக்காடிட்டது போல்' தோன்றியது.

இவற்றை எல்லாம் கவனித்த ஒரு நெட்டைப் பனைமரம் கர்வமாகி சிரித்துவிட்டு எண்ணுகிறது :

'கிழட்டுப் பிணம்! இன்னோ

அந்த மோன மொழியை தாங்கிச் சென்ற காற்றிலேயே அரச மரத்தின் சோக நெடு மூச்சும் கலந்தது.

இவ்வளவையும் கவனித்தும், காலம் ஒன்றையும் கவனியாதது போல ஓடியது......ஓடிக் கொண்டே இருந்தது.

திடீரென மொட்டை மரத்தில் மொட்டுகள் போல் பல தோன்றின. சில நாட்களில் அவை தளிர்த்து சூரிய ஒளியின் ஜிலுஜிலுக்கும் கண்ணடி இலைகளாக மாறின. பிறகு அவையே சொர்ணத் தகடுகளாக தகதகத்தன. சில நாட்களில் மரம் முழுவதும் ஒரே கிளிப்பச்சை. மூத்தமிடும் காற்றிலே மோன கீதத்தைக் கலக்கிவிட்டு, மங்கை பருவம் மேனி முழுவதும் பொங்கி வழியும் அழகுக்கன்னி போல் விளங்கியது அரச மரம்.

அதன் புதுப்பெண் கோலத்தைக் கண்டு கதிரோன் முகம் செவக்கச் சிரிக்கிருன். பூர்ண சந்திரன் புன்னகை ஒளியென சொரிகிறது பூ நிலவு.

பனை மரம் பெருமூச்சுடன் நினைக்கிறது.

'ஹூம்! காலம். வாழ்விலே என்னென்ன அற்புதங்களைத் தான் செய்து விடுகிறது.

ட சிறுகதை

எம். எஸ். கமலா

மனவிரிசல்

———

. ரமா சொல்கிறுள்

"லல்லா....லால,...லல்லா.... லால...லல்லா......லா......ல..... லல்லா....லா....ல....லா......" என்று வெகு இனிமையாய் பாடிக் கொண்டே டிபன் தயாரித்துக் கொண்டிருந்த காதில் பால்காரன் குரல் கேட்டது. ஆயா பால்காரன் கூப்பிடுகிறுன் போய் பார்த்துக் கொள். இதோ வறேன் என்று என் வேலையை முடித்துக் கொண்டு சுவரிலிருந்த கடியாரத்தைப் பார்த்தேன். மணி நான்கடித்து பத்து நிமிடங்களாகி விட்டன. பாழாய்ப் போன ஞாயிற்றுக்கிழமை வந்தாலே எத்தனை பொழுதிருந்தாலும் போதவில்லை. அதிலும் கலியாண சீஸன்வேறு. பொது வாழ்வில் ஈடுபட்ட எனக்கோ முகமறிந்த, அறியாதவர்கள் வீட்டுக் கலியாண அழைப்புகள். அதற்கு வேறு தவருமல் தலைகாட்ட வேண்டியிருக்கிறது. கூடிய வரை எத்தனையோ இடங்களுக்கு என் சகோதரன் மனைவியை அனுப்பிக் கொண்டிருந்தும் தவிர்க்க முடியாத சில இடங்களுக்கு நான் தான் போக வேண்டியிருக்கிறது.

அன்று என் ஆப்தநேசியின் மகளுக்குக் கலியாணம். காலையில் செல்ல முடியவில்லை. மாலை வரவேற்புக்கு அவசியம் சென்ருக வேண்டும். போதாகி விட்டதே என்று முணுமுணுத்துக்கொண்டு பால் பாத்திரத்துடன் வாயிற்படியருகில் சென்றேன். ஞாயிற்றுக்கிழமை பொழுது போக்கிற்காக யாரோ ஒருவர் வந்தார். அவர் என் மூத்த சகோதரனின் நண்பர். முகத்தை சிறுத்துக் கொண்டு வழிவிட்டேன். என் அன்பு சகோதரன் சுரேந்தர் மத்தியானம் வெளியில் சென்றவன் அப்படியே காரியாலயத்திற்குச் சென்றுவிட்டதாக இளையவன் நரேந்தர் சொன்ஞன். அவனுக்கு அலுவலகத்தில் வேலையிருந்தால் சூழ்நிலையையும் சுற்றுப் புரத்தையும் மறந்து விடுவான். ஆறுமணிக்கு நேசியின் வீட்டுக் கலியாணத்திற்குச் செல்ல வேண்டுமே என்ற கவலையுடன் பாலைப் பார்த்துக்கொண்டு நின்றேன். என்னைப் பார்த்த அடுத்த வீட்டு அம்புஜம் ரமா! நீ சுபாஷிணி வீட்டு கலியாணத்திற்கு செல்கிருயா? எங்காத்துக்காரர் உங்கள் வீட்டில் யாராவது போனால் போகச் சொல்லி சொல்லி விட்டுப் போனுரடி!" என்று என் முன் வந்து நின்ருள்.

நான் போகப் போகிறேன். சுரேந்தர் காலையே அலுவலகத்துக்குச் சென்று விட்டான். வந்து அழைத்துப் போவான். நீயும் வா; போகலாம். ; என்னும் போதே விரலிலணிந்திருக்கும் வைர மோதிரம் வெயிலில் பளிச்சிட, மோதிரமிட்டகையால் முகத்தைத்துடைத்துக்கொண்டே வந்தான் சுரேந்தர்.

அதோ சுரேந்தர் வந்துவிட்டார். நானும் தயாராகி வருகிறேன். என்று அம்புஜம் வீட்டிற்கு விரைந்தாள். நான் பாலை வாங்கிக் கொண்டு உள்ளே வரும் போது சுரேந்திரனின் காதலி அவனுடன் பேசிக்கொண்டிருந்தாள். நான் வேலைகளை அவசர அவசரமாய் செய்து கொண்டிருந்தேன். அவள் மாமி! நான் போய் வருகிறேன் என்று சொல்லிச் சென்ருள். நான் என் வேலைகளை முடித்துக் கொண்டு என் அறைக்கு வந்த போது சுரேந்தர் வெகு ஜோராய் உடுத்தி முகத்தில் மகிழ்ச்சி பொங்க நின்றிருந்தான். இன்னும் மணி ஐந்தாகவில்லை. நாங்கள் ஆறுமணிக்குப் புறப்படுவதாக திட்டமிட்டிருந்தோம். அதற்குள் அவன் தயாராயிருப்பதைப் பார்த்து எனக்கு ஆச்சரியமும் சிறு சந்தேகமும் தோன்றியது.

எங்கே புறப்பட்டாய்? இன்னும் நான் தயாராகவில்லையே? என்றேன்.

நான் எங்கோ போகிறேன் என்ருன். பௌடர் பூசி பளிச்சென்றிருந்த அவன் முகத்தில் சற்றே நிழலோடியது. என் மனதில் தோன்றிய சந்தேகம் பளிச்சிட்டது. என் வாய் நான் எண்ணியதை கக்கியது. அவளுக்கு வாக்களித்து விட்டாயோ? அப்படி அளித்திருந்தால் அதை நிறைவேற்றச் செல்லலாம். என்று விர்ரென்று அறையை விட்டகன்றேன். அவன் காலில் அணிந்திருந்த 'ஷூ'வைக்கழட்டி நாற்காலியில் சாய்ந்தான். வெளியில் வந்தவள் அவனைத் திரும்பி பார்த்தேன். மழை பொழிந்த வானம் போல் என் மனம் நிர்மலமாகியது. சுபாவமான குளிர்ந்த நிலைக்கு வந்தேன். சுரேந்தர்! உன் காதலியுடன் படம் பார்க்க செல்லப் போகிருயா? போய்வா! என்றேன்.

இல்லை. நான் எங்கும் செல்வதாக இல்லை. எங்கோ செல்கின்றேன் என்ருன்.

எங்கோ செல்வானேன்? எனக்கோ தனியாய் போய் பழக்கமில்லை. எங்களை அழைத்துச் செல். அடுத்த வீட்டு அம்புஜம் கூட நம்முடன் வருகிருளாம். என்றேன்.

அப்போ அம்புஜத்துடன் செல்லலாமே! நானெதற்கு?

நீ அழைத்துச் செல்கிருய் என்றுதானே அம்புஜமும் வருகிருள்.

அம்புஜத்திற்கு எல்லா இடமும் தெரியுமே! சுந்தர் வனத்திற்கு அடுத்த திருப்பத்தில் கலியாண வீடு என்று விசிறியால் படக் படக்கென்று விசிறிக் கொண்டான்.

அதென்னவோ எனக்குத் தெரியாது என்று அடுக்களைக்குள் சென்று அடுப்பிலிருக்கும் குழம்பை இறக்கிவிட்டு வந்து பார்த்தால் சுரேந்தரைக் காணவில்லை. அவன் சாதாரணமாய் காரியாலயத்திற்குச் செல்லும் போது தவிர வேறு எப்பொழுதும் ஸ்லிப்பர்ஸோ, ஷூஸோ அணிவது வெகு அரிது. அன்று அணிந்திருந்தவன் கழட்டி விட்டு உட்கார்ந்திருந்தான். எனக்காக ஸ்லிப்பர்ஸையும் கழட்டி விட்டுக் காத்திருக்கிருன் என்று களிப்புடன் அடுக்களைக்குள்சென்றேன். இமைப்பொழுதில் மாயமானைப் போல் மறைந்து விட்டான்.

என் மனதில் தோன்றிய சந்தேக இருள் விரிந்தது. நான் பால் வாங்கிக்கொண்டு உள்ளே வந்தபோது அவன் காதலிகதைத்தது மின்னியது. மாமி என்னைக் கலியாண வீட்டிற்கு அழைத்தாள். நான் வரவில்லை என்றேன். நீங்கள் போகப் போகிறீர்களா?

நானும் போகப் போவதில்லை. இச்சொற்கள் தேய்ந்து கரைந்து உருவற்று ஒலித்தன. சந்தேக இருளை அச் சொற்களின் ஒளிக் கதிர்கள் விரட்டியடித்தன.

மானிட ஜன்மத்திற்கு இறுதி வரை அற்ப ஆசையும் அணுவளவு நம்பிக்கையும் தான் ஊக்கமளிக்

(11-ம் பக்கம் பார்க்க)



ரஸத் துளி

"ராதிகா" சேர்த்தது

ஒரு பெண்ணும் ஒரு ஆணும் நட்பாயிருந்ததால் அது காதலாசத்தான் இருக்க வேண்டுமா? பரஸ்பரம் ஏற்படும் நட்பும் அபிமானமும், ஏன் சகோதர பாசமாக இருக்கக் கூடாது? ஏன் மக்களில் பலர் அதைத்தவறாய்எண்ணுகின்றனர்? ஒரு பெண் பல ஆண்களுடன் பழகுவதாலும் பேசுவதாலுமே அவள் மீது வீண் சந்தேகம் கொண்டு தவறாய் எண்ணுவதும், ஒரு ஆண் பல பெண்களிடம் பழகுவதால் அவன் மீது தவறு நினைப்பதும் எத்தனை அபத்தமானது என்பதை உலகில் ஏன் நினைப்பதில்லை? உண்மை நிலையை ஆராய்ந்து பின்னரே எதையும் நிர்ணயிக்கலாமேயன்றி சிந்தியாமலே தவறு கற்பித்து விடுவது மகாத்தவறு என்பதை ஏன் மக்கள் உணர்ந்தும் நடைமுறையில் மீறுகின்றனர்? ஏன், அவர்கள் நட்பு, வாத்ஸல்யமாகவோ சகோதரபாசமாகவோ அபிமானமாகவோ இருக்கக் கூடாதா? இதைக் கூர்ந்து யோசித்தால் யார் எப்படி தங்கள் மனதை செலுத்தியுள்ளார்களோ அதேபோலத்தான் பிறரையும், ஆராய்ந்து யோசியாமல் எண்ணி விடுகிறார்கள் என்று தான் நினைக்கத்தோன்றுகிறது. தன் மனதில் உள்ளது தானே பிரதிபலிக்கும்?

அநுபவம்—ரஸத்தைப்பிழிந்து கொடுக்கும்போது எவ்வளவு கசப்பாக இருக்கிறது? ஆனால் அதையே ரஸிப்பதற்காக என்று மட்டும் இருந்தால் எத்தனை கொம்மாளங்களும் ஆரவாரிப்பும்? சினிமா நாடகம் இவைகளில் சோகமானகட்டங்களில் ரஸிப்பது மட்டுமல்ல. சிலர் தங்கள் மகிழ்ச்சியைக்கூட மற்றவர்கள் கஷ்டப்படும்போது காண்பிக்கின்றனர். ஆனால் அதே மாதிரியானதோர் நிலை தங்களுக்கு வந்தால்? ......அதை எப்போதும் யோசிக்க வேண்டும். தவிரவும் கஷ்டம் என்பது எப்போதும் வரும் என்பது யாருக்கும் தெரியாது. பிறர் கஷ்டம் கண்டு நகைப்பது பெரும் தவறு என்பதை யாரும் ஒரு போதும் மறக்கக்கூடாது.

இவ்வுலகம் வாழத் தெரியாதவனுக்கு நீலிக்கண்ணீர் வடிக்கும். வாழத் தெரிந்தவன் முன், வாழத் துடிப்பவன் முன் வழியில் வந்து குறுக்கே நிற்கும். எது பாதுகாக்கப்படுகிறதோ அதன் மீது தான் இச்சை ஏற்படும். அளவு மீறிய கவனிப்பு தான் திருடனை உண்டாக்கும்.

மனிதன் பழக்கவழக்கம், அவன் உலகத்தை எந்த விசையுடன் எந்தக் கண்களுடன் பார்க்கிறான் என்பதற்குச் சான்று, அவன் சுற்றுப்புறமும் அவன் வாழ்வில் ஏற்பட்ட சோதனைகளுமே யாகும்.

வாழ்க்கையே ஓர் நீண்ட கனவு. விரும்புகிற இன்பத்தை சிலர் கனவிலும் கற்பனையிலுமே தான் காணமுடியும்.

வாழ்க்கைத் துவக்கத்திலேயே எமாற்றம் எற்படும் போது வாழ்வே ஓர் சுமைதான். அதிலும் மனம் தளராமல் வெற்றி பெற முயலும் போது இன்பம் என்ற சொல்லின் தகவலே கிடைக்காமல் போகுமானால் உள்ளம் கண்ணாடிப் பாத்திரம் நொறுங்குவது போல் தான்! ஆனால் மனம் தளரவிட்டால் அதனால் எற்படும் சம்பவங்கள் வாழ்க்கை தரத்தையே மாற்றிவிடும். முடிவு விபரீதமாய் விடும்.

மனதை அலைய விடுவதைவிட மறந்து இருப்பதே மேலாகும்:

அழகாகப் பளிச்சிடும் மின்னல் நிரந்தரமாக நீடிப்பதில்லை. களங்கமுள்ள சந்திரனோ தேய்ந்தாலும் வளர்ந்தும் விடுகிறான். இதென்னமாயை? ஒன்றை அழகு பெறச்செய்தும் ஒன்றை மறைத்து விடும் விந்தைச் செய்கையின் அர்த்தம் என்ன?

பெருமூச்சு இதயத்திற்குள் சுழன்றடிக்கும் வேதனைப் புயலின் சீற்றம்! துன்பத்தின் குமுறல்! பொறாமைக்கண்முன் மனிதரின் கண்கூட மங்கி மறைந்து விடும் போல் இருக்கிறது. சத்ரு நண்பனாகவும் நண்பன் சத்ருவாகவும் மாற்றிவிடுகிறது.

விதி—இது காட்டும் வழியைக் கண்டு அழுவதா சிரிப்பதா? இன்பம் என்று நம்மையே ஏமாற்றிக் கொள்கிறோம். இதில் உண்மை இல்லை என்றால் யாரும் ஒத்துக் கொள்வதில்லை. ஆனாலும் விதியை திட்டுவதால் அதைத் தோற்கடித்து விடமுடியாது.

மனக்கசப்பை எப்படிக் கூறினாலும் அது புண்பட்ட உள்ளத்திற்குக் குறைவாகத்தான் தோன்றும்.

நோயாளிக்காக மற்றவர்கள் இரக்கப்படுவார்கள். மருந்தும் கொடுக்கிறார்கள். ஆனால் நோயை விட பன்மடங்கு பயங்கரமான மனவேதனையை யாராலும் தீர்க்க முடியாது. தீர்க்க முயல்வதும் இல்லை. ஆனால் அதற்கு விதி என்று சமூகம் பெயர் வைத்துவிடுகிறது.

விதி என்று எளிதில் சொல்ல முடிகிறதே யன்றி அதை ஏன் பார்க்க முடிவதில்லை? அதற்குப் பலியானவர்களைத்தானே பார்க்க முடிகிறது?

கண்ணிமைக்கும் நேரத்தில் கற்பனைக்கும் எட்டாத அற்புதங்களை நடத்திக்காட்டும் விதி சிலர் கூறுவது போல் அர்த்தமற்றதாய் இருக்கலாம். ஆனால் அனர்த்தமற்றது என்று கூறுவதற்கில்லை. ஏதோ ஒரு சக்தி மனித முயற்சிக்கும் அப்பாற்பட்ட அடிவானத்தில் வில்போட்டிருக்கிறது. சில சமயங்களில் பார்வைக்கு நன்றாய் இருக்கிறது. மற்றும் சில சமயங்களில் காணாமலே போய்விடுகிறது. அதைப் போலவே விதி இன்பத்தைக் கொடுக்கும்போது

றது. துன்பத்தைக்
போது தூரத்துப் பச
தோற்ற மளிக்கிறது. கட
அமிழ்ந்துபோய்க் கொண்டி
வருக்கு ஞானோதயம் வரு
போல எல்லை மீறிக் கஷ்டம்
பட்டுத் தவிர்க்க முடியாதிருக்கு
போது விதியை ஓரளவு நம்பு
படி ஏற்பட்டு விடுகிறது. உலகில் துன்ப அனுபவங்களினூடே, இன்பத்தின் நூலேணிதான் வாழ்க்கையின் உயிர்ஸ்வரமாக இருக்கிறது.

நம்பிக்கையை ஊன்றுகோலாகக்கொண்டு இன்பம் என்ற சொல்லைக்கனவு கண்டு வாழ்க்கைக் கடலில் மனிதர்கள் குதிக்கிறார்கள். அந்த ஆழம் காண முடியாத கடலில் சிலருக்குத் தண்ணீரின் ஆழம் மிகக் குறைவாகவேயிருக்கிறது. சிலருக்கோ—முழுகிச் சாகவும் முடியாமல் கரை சேரவும் முடியாமல் மூச்சுத்திணறுகிறது. ஆனால்—அவர்களைக் கரையில் நிற்கும் யாரும் கை கொடுத்து உதவ முன்வருவதில்லை. தவிக்கும் அவர்களைக் கண்டு அந்த சமயத்தில் பாவம், புண்யம் விதி என்று கதை அளக்கிறார்களே தவிர வருந்தாதே என ஆறுதல் மொழி சொல்லக்கூட பலர் நடுங்குகின்றனர்.

பலர் தங்களைப்பற்றியும் தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதையும் மறந்து—மற்றவர்களைத் தூற்றிப் பேசுவதிலேயே கவனம் செலுத்துகின்றனர். விஷயம் அத்துடன் நின்றாலும் பாதகமில்லை. தனிப்பட்ட ஒருவனோ ஒருவளோ யாராக இருந்த போதிலும் அவர்களைப்பற்றித் தங்களுக்குச் சம்பந்தமில்லாத விஷயங்களையும் அவர்கள் வாழ்க்கையைப் பற்றியும் அதிகப்பிரசங்கித்தனமாக நடந்து வருகிறது. இது தவறு என அறிந்தும் மாறாதது ஏன்? இது உலகம் முன்னேற்
மடையாது பின்னேற்றமடைய
தங்களால் ஆன கைங்கர்யம் என
அறிய மாட்டார்களா? என்ன?

மனிதர் மமதை கொண்டு பிற
நலனை அழிப்பது எளிது. ஆன
ஒருவருடைய வாழ்க்கைத்
தரத்தை உயர்த்துவது என்பது
அவ்வளவு எளிதல்ல. பரா
நோக்கமும் சிறந்த அறி
ஆழ்ந்த அன்பும் பிறர் நல
மனி



ஊன்றிய கொள்கையும் ஒன்றே கணந்தோறும்
தோன்றும் கடமைகள் ஆற்றுதல் நன்றே

ஒளி 23] 11-5-58 [வாரம் 23

கர்ம வீரர்

டாக்டர் கான் சாகிப்

பாகிஸ்தான் குடியரசுக் கட்சித் தலைவரும், இந்திய விடுதலை இயக்கத்தின் முன்னணித்தலைவர்களில் ஒருவரான டாக்டர் கான் சாகிப் கொலையுண்டார் என்ற செய்தி, இந்திய, பாகிஸ்தானிய மக்கள் மனத்தில் பேரதிர்ச்சியை உண்டாக்கி விட்டது.

எல்லைக் காந்தி கான் அப்துல் கபார்கான் அவர்களின் மூத்த சகோதரர் டாக்டர் கான் சாகிப், எல்லைப்புற மக்களின் அன்புக்கும் அபிமானத்திற்கும் உரியவர் அந்த பெருமகன்.

உயர் பதவியை உதறித்தள்ளி, இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமது இளைய சகோதரர் கபார்கானுடன் இணைந்து தேச விடுதலைக்காக அரும்பாடுபட்ட அந்த உத்தமர் ஆவி பிரிந்து விட்டது.

விடுதலை இயக்கத்தில் அலி சகோதரர்களுக்குப் பின்னால், கான் சகோதரர்கள் சந்திர சூரியர்கள் போல விளங்கினார்கள். பெரிய சாம்ராஜ்யமே கான் சகோதரர்களைக் கண்டு கதி கலங்கிற்று.

எல்லை மாகாணத்தின் முதன் மந்திரியாக இருந்து கான் சாகிப் செய்த சேவை பிரசித்திப் பெற்றது. இந்தியா விடுதலை அடைந்ததும் நாடு பிரிவினைக்கு இசையாமல் கான் சகோதரர்கள் ஒற்றுமைக்காக உழைத்தார்கள். பிரிவினையே முடிவு என்பது ஏற்கப் ... கான் சாகிப்யும் பாகிஸ்தான் அரசாங்கம் கைது செய்து காவலில் வைத்தது, பின் விடுதலை செய்து பதவியும் அளித்தது.

பாகிஸ்தான் அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதில் தமது சகோதரருடன் மாறுபட்ட கருத்து உடையவர் டாக்டர் கான் சாகிப். மேற்கு பாகிஸ்தான் முதன் மந்திரியாக பதவி ஏற்று சேவை செய்தார். அதனை உணர்ந்து போற்றும் வாய்ப்பு அங்குஇல்லை. பதவியிலிருந்து விலகி பாகிஸ்தான்முன்னேற்றத்திற்குஅமைதியாக சிந்தித்து தமது திட்டத்தை உருவாக்க நினைத்த இந்த சமயத்தில் அவர்; படுகொலை செய்யப்பட்டது பரிதாபமானது. லியாகத் அலிகான் கொலை செய்யப்பட்ட பிறகு இது இரண்டாவது படுகொலையாகும்.

மொழியால், இனத்தால், அரசியல் அநீதியால் பிரிக்கப் பட்டாலும் இந்த படுகொலை இந்திய பாகிஸ்தானிய மக்களின் பொதுத் துயரமாக பொது நஷ்டமாக கருதும் அளவுக்கு இருக்கிறது.

தள்ளாத காலத்தும் ஒதுங்கி நில்லாமல் கர்ம வீரராக பணி புரிந்து கத்திக்கிரையான கான் சாகிப் அவர்களின் உத்தமர் ஆன்மா சாந்தியடைய இந்நாட்டு மக்கள் தங்கள் இதய அஞ்சலி செலுத்துகிறார்கள்.

மறைந்த வீரருக்கு நமது அஞ்சலிகள் சகோதர பாகிஸ்தான் மக்களுக்கு நமது அனுதாபம்

டிரங்க்டெலிபோன் காலகட்டணம்.

சென்னை நகரத்தில். தற்போது டெலிபோன்கள் விஷயத்தில் டிரங்க் கால் பில்கள் சந்தாதாரருக்குக் கிடைத்ததிலிருந்து ஏழு நாட்களுக்குள் (சர்க்கார் சந்தாதாரர்கள் விஷயத்தில் 60நாட்கள்) அவைகளுக்கான கட்டணங்கள் கட்டப்படாவிட்டால் தடை விதிக்கப்படுகிறது. (புராஸ்கிரிப்ஷன்) தடை விதிக்கப்பட்ட பிறகுங்கூட பில்களுக்குப் பணம் கட்டாமலிருந்தால், அவ்வாறு பணம் கட்டத் தவறிய எல்லா சந்தாதாரர்களின் டெலிபோன்களும் 90 நாட்களுக்குப் பிறகு துண்டிக்கப் படுகின்றன. (டிஸ்கனெக்ஷன்)

சென்னை நகர சந்தாதாரர்கள் விஷயத்தில், டெலிபோன்களுக்குத் தடை விதிக்கும் இந்த முறை 1958 மே 1ந் தேதியிலிருந்து நிறுத்தப்பட்டுவிட வேண்டுமென்று புது டில்லியிலுள்ள தபால்-தந்தி டைரக்டர்-ஜெனரல் முடிவு செய்திருக்கிறார். எனவே அத்தேதியிலிருந்து இனிமேல் டெலிபோன்களுக்குத் தடை விதிக்கப்படமாட்டாது; ஆனால், டிரங்க் கால் பில்கள் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் (சர்க்கார் சந்தாதாரர்கள் விஷயத்தில் 60 நாட்கள்) அவைகளுக்கான கட்டணங்கள் கட்டப்படா விட்டால் டெலிபோன்கள் நேரடியாகத் துண்டிக்கப்பட்டுவிடும்.

வாஸ்தவமாய்த் துண்டிக்கப்படுவதற்கு முன், சந்தாதாரர்களுக்கு அதுபற்றி டெலிபோனில் தெரிவிக்கப்படும்; அவர்கள், இரண்டு நாட்களுக்குள் வழக்கமாகக் கட்டுமிடங்களில் பணத்தைக் கட்ட ஏற்பாடு செய்து விட்டு, அது பற்றிய விவரங்களை இக்காரியாலயத்துக்குத் தெரிவிக்க வேண்டும், அல்லது, ஏற்கனவே பணம் கட்டப்பட்டிருந்தால் அவ்வாறுபணம் கட்டியது பற்றிய விவரங்களை இக் காரியாலயத்துக்கு (டெலிபோன் நிர், 88884) தெரிவிக்க வேண்டும். அவ்வாறு கட்டத் தவறினால், அதற்குப் பிறகு ஸ்தல சேவைக்கோ அல்லது டிரங்க் சேவைக்கோ டெலிபோன் கிடைக்காது.

அதே தேதியிலிருந்து தாங்களாகவே சுயமாகத் தடைசெய்து கொள்ளும் (பிராஸ்கியூஷன்)வசதியும் வாபஸ் பெற்றுவிடப்படும். இப்போது இந்த வசதியை உபயோகித்து வருகிறவர்கள் உட்பட எல்லா சந்தாதார்களும். தங்களுடைய டெலிபோன்களில் தங்களுடைய அனுமதியின்றி எவரும் டிரங்க் கால் பேசாதபடி பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். ஏனென்றால், தங்களுடைய டெலிபோன்கள் மூலம் செய்யப்படும் எல்லா பேச்சுக்களுக்கும் அவர்களே தான் பொறுப்பாளிகளாவார்கள்.

நான் கண்ட

ரஷ்யா

ஸ்ரீ ஜி. சி. பட்டாபிராம்

சோவியத் ரஷ்யா 16-குடி அரசுகள் சேர்ந்த ஒரு ஐக்கியம். ஒவ்வொரு குடி அரசிற்கும் பாஷை வேறு, மதம், நாகரீகம், பண்பாடு இவைகளெல்லாம் வேறு. ஜனத்தொகையில் அழகிய ஆரியர்களாகிய ஆர்மீனியர்களையும், காகேசியர்களையும் காணலாம். குட்டையான மங்கோலியர்களாகிய உஸ்பெகார்கள் காசகர்களையும் காணலாம். ரஷ்யாவின் விஸ்தீரணம் ஒன்றரை கோடி சதுர மைல். உலகப் பரப்பில் இது 6-ல் ஒரு பங்கு. ஐரோப்பாவில் பாதி. ஆசியாவில் மூன்றில் ஒரு பங்கு. நாட்டின் நீளம் மேல் கீழக்காக 6000 மைல்கள். வட தெற்காக 3000 மைல்கள். இதன் கடற்கரையின் நீளம் 29000 மைல்கள். இந்நாட்டிற்கு அண்டை நாடுகள் பனிரெண்டு. ஜனத்தொகை இருபது கோடி.

இவ்வளவு பெரிய நாட்டில் நான் பார்த்த ஊர்கள் டஷ்கண்ட், லெனின் கிராட், மாஸ்கோ. தில்லியிலிருந்து காபூல் மார்க்கமாக மாஸ்கோ செல்ல வேண்டும். காபூலிலிருந்து ரஷ்ய விமானத்தில் டஷ்கண்ட் சென்றேன். ஹிந்துகுஷ் மலைகள், பாமீர்-பீடபூமி இவைகளைக் கடந்துசெல்லும் பொழுது பழையகாலத்தில் புத்த பிக்ஷுக்களும் சீனப் பிரயாணிகளும் கஷ்டப்பட்டு சென்ற பாதையில் சுகமாக விமானத்தில் செல்வதை நினைத்து சந்தோஷமடைந்தேன். ஏனென்றால் பாஹியான் ஹுயான்சாங் இவர்களை வழிமறித்த கொள்ளைக்காரர்கள், ஜெட் விமானத்தைத்தொடர முடியாதல்லவா?

டஷ்கண்ட் மத்திய ஆசியாவில் ரஷ்யாவைச் சேர்ந்த உஸ்பெகிஸ்தான் குடி அரசின் தலைநகரம். பழம் பெருமை வாய்ந்த நகரங்களாகிய பொகாரா, சாமர்கண்ட், கீவா இதன் சமீபத்தில் இருக்கின்றன. இங்கு வசிப்பவர்கள் எல்லோரும் இஸ்லாமியர்கள். ரஷ்ய ஐக்யத்தில் சேர்ந்த இந்த உஸ்பெகிஸ்தான் மாகாணம் இத்தாலி தேசத்தைக் காட்டிலும் பெரியது. ஜனத்தொகையில் ஆஸ்திரேலியாவை ஒக்கும். நகரத்தை மக்கள் வெகு சுத்தமாக வைத்திருக்கிறார்கள். சாமர்கண்ட் பொகாராவில் இருக்கும் கட்டடங்களைப்போல் அமைந்த புதிய கட்டடங்களும் அரசாங்க காரியாலயங்களும் இந்தியர்களுக்கு தில்லியிலுள்ள மஹமதிய மன்னர்கள் கால கட்டடங்களை நினைவுறுத்துகின்றன. கட்டடங்கள் அனைத்தும் இந்தோசாரசானிக் பாணியில் அமைந்தவை. ரஷ்யாவில் புதிய கட்டடங்களை அந்தந்த ராஜ்யங்களின் பண்பாட்டிற்கும் கலை வளர்ச்சிக்கும் ஏற்கக் கட்டியிருக்கிறார்கள்.

டஷ்காண்டிலிருந்து மாஸ்கோ செல்ல மூன்றரை மணி நேரம். மொத்த தூரம் சுமார் இரண்டாயிரம் மைல். ஜெட் விமானம் மணிக்கு 600 மைல் வேகத்தில் 30000 அடிக்கு மேல் செல்கிறது. டஷ்கண்ட் மணிக்கும் மாஸ்கோ மணிக்கும் மூன்றரை மணி நேரம் வித்தியாசம் இருப்பதால் புறப்பட்ட நேரத்திலேயே மாஸ்கோ விமான நிலயத்தை அடையலாம்.

"மாஸ்கோவா" என்று ரஷ்யர்கள் அழகாக அழைக்கும் மாஸ்கோ நியூயார்க், லண்டன், பாரிஸ் போன்ற உலக முக்கியத்வம் பெற்ற நகரம். கி. பி. 1147 ஆண்டில் இளவரசர் டால் குருகி என்பவர் மாஸ்கோ நதிக்கரையில் இந்த நகரத்தை நிர்மாணித்தார். இந்த நகரமும் பீட்டர் மன்னரால் 250 வருடங்களுக்கு முன் நீவா நதிக்கரையில் கட்டப்பட்ட லெனின் கிராட் நகரமும் ரஷ்யாவின் இரு பிரதான நகரங்கள். இவைகள் வெகு அழகிய நகரங்கள். பல வானளாவிய கட்டடங்கள், விசாலமான சாலைகள். இவைகளின் அழகைப் பன்மடங்கு பிரகாசிக்கச் செய்கின்றன.

இவ்வளவு பரந்த தேசத்தில் இவ்வளவு இன நிற வேற்றுமைகளையும் மத வித்தியாசங்களையும் பார்த்தாலும் எல்லோரும் ஒற்றுமையாகத் தனது நாடு செழிக்க வேண்டும், நாட்டின் பொருளாதாரம் விருத்தியடைய வேண்டும், என்ற ஒரே எண்ணத்தைக் கொண்டு உழைப்பதைப் பார்க்கலாம். இதற்குக் காரணம் ஆழ்ந்த தேச பக்தியும், ஒவ்வொரு தனி மனிதனும் தான் சோவியத் யூனியனைச் சேர்ந்தவன் என்றஎண்ணமும் தான். 40 வருஷங்களுக்கு முன்பு பிற்போக்கான நிலைமையில் இருந்த ரஷ்யா இப்பொழுது அபரிமிதமாக முன்னேறியிருக்கிறது. தவிரவும் போன யுத்தத்தில் ஜெர்மனியர்களால் தாக்கப்பட்டு, அதன் பொருளாதாரம் சீர்குலைவுற்றது. பல பட்டினங்கள் ஜெர்மன் குண்டுகளுக்கு இலக்

(8-ம் பக்கம் பார்க்க)



அமுத வாக்கு

எதையும் தோன்றிய மாத்திரத்திலே சூட்டோடு செய்யும் போது, அதில் வெற்றி பெரும்பாலும் நிச்சயமாகக் கிடைக்கும். அதைத் தூங்கப் போட்டு விட்ட பிறகு செய்யப் போனால், அதில் ஆரம்பத்தில் இருந்த ரஸம் குறைந்து போகும். அதற்குத் தக்கபடி பயனும் குறைவெய்தும்.

BALANCE SHEET AS AT 31ST DECEMBER, 1957.

APITAL AND LIABILITIES	Details Rs. nP.	TOTAL Rs. nP.
pital :		
Authorised Capital :		
000 Ordinary Shares of Rs. 12-50 each ...	75,000--00	
ued, Subscribed, Called & Paid up Capital:		
6,000 Ordinary Shares of Rs. 12-50 each ...	75,000--00	75,000—00
Reserve Fund and other Reserves:—		
Reserve Fund ...	1,00,000--00	
Reserve for bad and doubtful debts ...	12,022--67	
Investment Fluctuation Reserve ...	14,210—30	
Dividend Equalisation Fund ...	2,008—50	
Reserve for Building ...	5,000—00	1,33,241—47
Deposits and other Accounts:—		
Fixed Deposits ...	2,56,235—32	
Monthly Deposits ...	10,020—00	
Security Deposits ...	1,500—00	
Current Accounts, Contingency Accounts, Etc. ...	4,330—74	2,72,086—06
Borrowings from other Banking Companies, Agents, Etc.		
1. In India ...	62,500—00	
2. Outside India ...	Nil	62,500—00
rticulars:—		
1. Secured ...	62,500—00	
2. Unsecured ...	Nil	
Bills payable ...	Nil	
Bills for collection being Bills receivable as per contra:—		
Payable in India ...	Nil	
) Payable outside India ...	Nil	
Other Liabilities :—		
nclaimed Share refunds ...	437—50	
nclaimed Dividends ...	1,496—62	
Interest accrued ...	8,046—92	
Suspense (Sundry Credits) ...	1,541—35	
Advance interest on loans ...	1,220—41	
Provision for Income-tax ...	14,568—18	27,310—98
8. Acceptances—Endorsements and other obligations as per contra ...	Nil	

PROPERTY & ASSETS	Rs.	
1. Cash:—In hand and with Reserve Bank and State Bank of India (including foreign currency notes) ...		
2. Balance with other Banks:		
(1) In India (Staff Security Deposit with Bank of Baroda Ltd.) ...		1,50
(2) Outside India ...	Nil	
3. Money at call and short notice ...	Nil	
4. Investments at cost:—		
(1) Securities of the Central, and State Govts, and other Trustee Securities, including Treasury Bills of the Central and State Governments ...	1,60,306--26	
(Of face value of Rs. 1,61,000—00 Approximate market value Rs. 1,40,780—00		
(2) Shares ...	Nil	
(3) Debentures or Bonds ...	Nil	
(4) Other Investments ...	Nil	
(5) Gold ...	Nil	1,60,306-2
5. Advances :		
(Other than bad and doubtful debts for which provision has been made to the satisfaction of the Auditors) ...		4,02,022-6
1) Loans: Cash credits, Overdrafts etc.		
(i) In India ...	4,02,022-67	
(ii) Outside India ...	Nil	
2) Bills Discounted and Purchased:		
(Excluding Treasury Bills of the Central and State Governments)		
(i) Payable in India ...	Nil	
(ii) Payable outside India ...	Nil	
Particulars of Advances:—		
1) Debts considered good in respect of which the Banking Company is fully Secured ...	4,02,022--67	
2) Debts considered good for which the Banking Company holds no other Security than the Debtors' Personal Security ...	Nil	
3) Debts considered good, secured by the Personal Liabilities of one or more parties in addition to the Personal Security of the Debtors ...	Nil	
4) Debts considered doubtful or bad, not provided for ...	Nil	
5) Debts due by the Directors or Officers of the Banking Company or any of them either severally or jointly with any other persons ...	Nil	
6) Debts due by Companies or firms in which the Directors of the Banking Company are interested as Directors, Partners or Managing Agents, or in the case of Private Companies as Members ...	Nil	
7) Maximum total amount of Advances including Temporary Advances made at any time during the year to Directors or Managers or Officers of the Company or any of them either severally or jointly with any other persons ...	Nil	
8) Maximum Total Amount of Advances including Temporary Advances granted during the year to the Companies or Firms in which the Directors of the Banking Company are interested as Directors, Partners, or Managing Agents or in the case of Private Companies as Members ...	Nil	
9) Due from Banking Companies ...	Nil	
6. Bills receivable being Bills for Collection as per contra		

	Details	Total
9. Profit and [illegible]ss : ...		
Profit as pe[illegible] last Balance Sheet ...	31,007—77	
Less: Appropriations :		
[illegible]vision for Income-tax Rs. 14,375-0-0		
[illegible]vidends 13,500-0-0		
[illegible]estment Depreciation Reserve 3,132-12-3	31,007—77	
	Nil	
[illegible]d : Profit for the year brought [illegible]om the Profit and Loss Account ...		33,330—87
Contingent Liabilities	Nil	
Total ...		6,03,469—38

	Details	Total
6. **Bills receivable being Bills for Collection as per contra**		
(i) Payable in India ...	Nil	
(ii) Payable outside India ...	Nil	
7. **Constituents' Liabilities for acceptances, Endorsements & other obligations per contra**		
8. **Premises : Less Depreciation**		
Cost up to last Balance Sheet ...	Nil	
Less : Depreciation to date ...	Nil	
9. **Furnitures and Fixtures : Less Depreciation**		
Cost up to last Balance Sheet ...	966—37	
Add : Additions during the year ...	Nil	
	966—37	
Less : Depreciation up to last Balance Sheet ...	966—37	Nil
10. **Other Assets Iucluding Silver**		
Electricity Deposit ...	34—25	
Advance payment of Income-tax ...	8,805—83	
Court expenses ...	2,733—89	
Accrued interest on loans and investments ...	6,078—89	17,64[illegible]
11. **Non-Banking assets acquired in satisfaction of claims:** (Considered doubtful)		3,334[illegible]
12. **Profit and Loss** ...	Nil	
Total ...		6,03,469—3[illegible]

PROFIT & LOSS ACCOUNT FOR THE YEAR ENDED—31ST DECEMBER 1957.

Cr

EXPENDITURE		Details Rs. nP.	Total Rs.	nP.
[illegible]t paid on Deposits, Borrowings etc. ...			14,861	72
[illegible]s and Allowances and Provident Fund:				
[illegible]o Secretary	Rs 4,000—00			
[illegible]o Staff	Rs. 9,813—67			
	Rs. 13,813—67	13,813—67		
[illegible]ors' and Local Committee Members' fees and [illegible]ances ...		350—00		
[illegible]Taxes, Insurance, Lighting, etc, ...		1,517—27		
[illegible]harges ...		150—00		
[illegible]e, Telegrams and Stamps ...		224—05		
[illegible]r's Fees ...		200—00		
[illegible]ciation on and Repairs to the Banking [illegible]pany's Property ...		Nil		
[illegible]nery, Printing and Advertisement, etc. ...		1,245—50		
[illegible]rom sale of or dealing with Non-Banking Assets ...		Nil		
		333 —04		
[illegible] Expenditure ...			17,833	53
[illegible]e of Profit ...			33,330	87
Total Rs. ...			66,026	12

INCOME (Less provision made during the year for bad & doubtful debts and other usual or necessary provision)	Details Rs. nP.	Total Rs.
1 Interest and Discount ...		65,749
2 Commission, Exchange and Brokerage ...	Nil	
3 Rents ...	Nil	
4 Net Profit on sale of Investments, Gold and Silver, Land, Premises and other Assets ...	Nil	
5 Net Profit on Revaluation of Investments, Gold and Silver, Land, Premises and other Assets ...	Nil	
6 Income from Non—Banking Assets and Profit from sale of or dealing with such Assets ...	Nil	
7 Other Receipts		
Writing charges, Sale of forms etc. ...		276 6[illegible]
8 Loss (if any) ...	Nil	
Total ...		66,026

[illegible] Beemiah Chetty, A Krishnaswamy, R. K. Kandaswamy, A. Ramalingam. *Secretary:* K. KRISHNI[illegible]

[illegible]RS' REPORT :—We have audited the annexed Balance Sheet of The KRUPAKARA BANK LIMITED, as at 31st December 1957 and also the annexed P[illegible] [illegible]t of the Bank for the year ended on that date. The Bank has no branches and as such no returns from branches have been audited by us. [illegible]ance with the provisions of section 29 of the Banking Companies Act, 1949, read with the provisions to sub-sections (1) and (2) of Section 211 and sub-section (5) of Secti[illegible] (5) of the Companies Act, 1956 the Balance Sheet and Profit and Loss Account are not required to be and are not drawn up in accordance with the Sixth Schedule of the Co[illegible] Accounts are therefore drawn up in conformity with Forms A & B of the Third Schedule to the Banking Companies Act, 1949.

[illegible]— (a) We have obtained all the information and explanations which to the best of our knowledge and belief were necessary for the purpose of our audit and have fou[illegible] (b) The transactions of the Bank which have come to our notice, have been within the powers of the Bank. (c) In our opinion, proper books of account as req[illegible] by the Bank so far as appears from our examination of those books. (d) The Bank's Balance Sheet and Profit and Loss Account dealt with by this report are in [illegible] [illegible]nt. (e) In our opinion and to the best of our information and according to the explanations given to us the said accounts give the information required by [illegible] required for Banking Companies and on such basis, the said Balance Sheet gives a true and fair view of the state of affairs of the Bank as at 31st [illegible] [illegible] view of the profit for the year ended upon that date. (f) The Bank's title to the lands representing non-banking ass[illegible]

(...ம் பக்கம் தொடர்ச்சி)

...நாசமாக்கப்பட்டன. ரஷ்...ள் அந்த யுத்த வடுக்களை ...திரமாக மாற்றி இருக்கிறார்கள். ...தற்கு மக்களின் உழைப்பும் ...தசபக்தியும் அரசாங்கத்தின் ...திட்டமிட்ட பொருளாதார முறைகளுமே காரணம்.

ரஷ்ய மக்கள் பழகுவதற்கு அருமையானவர்கள். நேருஜி நாட்டிலிருந்து ரஷ்யா செல்லும் நமக்கு அமோகமான வரவேற்பு கிடைக்கிறது. நமது நாட்டுப் பண்பாடு சங்கீதம் இவைகளின் மேல் ரஷ்ய மக்களுக்கு அலாதி பிரியம். நான் தங்கியிருந்த சவாய் ஹோட்டலிலிருந்து செஞ்சதுகாதிற்கு ஒரு சாயுங்காலம் நடந்து சென்றேன். தூரம் இரண்டு பர்லாங் கூட இராது. போய் சேருவதற்கு ஒன்றரை மணி நேரம் பிடித்தது. ஆங்கிலம் தெரிந்தவர்களும், தெரியாதவர்களும் நின்று என்னிடம் பேசினார்கள். திருச்சியில் கடைத் தெருவில் நடந்து சென்றால் எத்தனை பேர்கள் நின்று பேசுவார்களோ அதை விட அங்கே பேசியவர்கள் அதிகம்.

ஒரு ஆங்கிலம் தெரியாத ரஷ்யன் என்னிடம் தனது பாஷையில் பேசினான். அடிக்கடி "இச்சகதானா" என்ற வார்த்தையை உபயோகித்தான். நான் அந்த வார்த்தையைக் கேட்டும் ஒன்றும் விளங்காமல் இருப்பதை பார்த்து ஆச்சரியமடைந்தான். பிறகு நான் அந்த வார்த்தையை ஞாபகமாக வைத்துக்கொண்டு நண்பர்களை விசாரித்ததில் அது ஒரு ஹிந்தி சினிமா பாட்டின் முதல் அடி என்று தெரிய வந்தது. தென்னிந்தியனான எனக்கும் அந்த ஹிந்தி பாட்டிற்கும் எவ்வளவு தூரம் என்பது ரஷ்ய வாசிகளுக்கு எப்படித் தெரியும்?

டஷ்கண்ட், மாஸ்கோ, லெனின் கிராட் முதலிய இடங்களில் நடன நாடகக் காட்சிகளைக் காண நான் சென்ற பொழுது தாமாகவே ஆங்கிலம் தெரிந்த பெண்மணிகள் என் அருகில் உட்கார்ந்து கதையின் போக்கையும் மற்ற அம்சங்களையும் எடுத்துச்சொல்லி கதை புரியும்படி செய்தார்கள். அங்கு அதிகமாகப் பெண்களே ஆங்கிலம் அறிந்திருக்கிறார்கள். நமது நாட்டினர்களைப் போலவே அறிமுகம் இல்லாமலேயே தாமாகவே வந்து நமது நாட்டைப் பற்றிய விஷயங்களைக் கேட்டார்கள். இதனால் எனக்கு வேறு ஒரு அன்னிய நாட்டில் இருக்கிற எண்ணமே இல்லாமலிருந்தது. ரஷ்ய குளிர் மாத்திரம் இல்லாமல் இருந்தால் ரஷ்யாவிலிருக்கிறோம் என்ற ஞாபகமே இராமல் இருக்கும்.

ரஷ்யாவில் பெண்கள் ஆண்களுக்கு சரிநிகர் சமானமாக எல்லா வேலைகளையும் செய்கிறார்கள். அதிகமாக வைத்தியர்களும், உபாத்தியாயர்களும் அங்கு பெண்களே. உஸ்பெகிஸ்தான் முதலிய இஸ்லாம் மாகாணங்களில் கூட பெண்கள் கோஷாவை உதறிவிட்டு நன்றாகப் படித்து ஆண்களுக்கு சமமாக எல்லாத் தொழில்களிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால் பெண்மைக்கு உரிய மரியாதையையும் காணலாம். பெண்கள் சிகரெட் குடிப்பது அனாகரிகமாகக் கருதப்படுகிறது. ஆகையால் பெண்கள் சிகரெட் குடிப்பதே கிடையாது.

தவிரவும் மேல் நாடுகளில் நாம் கேள்விப்படும் ராத்திரி கேளிக்கைகள் இங்கு கிடையாது. மாஸ்கோவை விட்டுப் பாரதத்திற்கு திரும்புவதற்காக இராத்திரி இரண்டு மணிக்கு சவாய் ஹோட்டலிலிருந்து விமான நிலையத்திற்குச் சென்றேன்- தூரம் சுமார் 20 மைல். எங்கும் ஒரே நிசப்தம் திருச்சியிலாவது அந்நேரத்திற்கு சாயாக்கடைகளும் கிராமபோன் சங்கீதமும் இருக்கும்.

ரஷ்யாவில் மதத்திற்கு இடமுண்டா என்று நேயர்கள் கேட்பது எனது காதுகளுக்குக் கேட்கிறது. இதற்கு பதில் சொல்வது சற்று சிரமமான காரியம் தான். நான் அங்கு மசூதிகளையும் மாதா கோவில்களையும் கண்டேன். அங்கு மத நம்பிக்கை உடையவர்கள் தொழுவதில் யாதொரு தடையும் செய்வதில்லை. தனிமனிதன், தனது மத நம்பிக்கை பிரகாரம் வழிபடுவதற்கு உரிமை உண்டு. அந்த உரிமையில் யாரும் தலையிடுவதில்லை. ஆனால் அரசாங்கம் மதச் சார்பு அற்றது, மதப்பிரசாரம் செய்ய யாருக்கும் உரிமை கிடையாது. பள்ளிகளில் மதபோதனை செய்யக் கூடாது. அரசாங்கம் மதத்திற்காகப் பணமானியங்கள் கொடுக்காது. மதத்தில் நம்பிக்கை உடையவர்கள் கொடுக்கும் பணத்தைக் கொண்டு மாதாக் கோவில்களிலும் மசூதிகளிலும் வழிபாடு நடக்கிறது.

லெனின் கிராட்டில் ஒரு மாதா கோவிலுக்குச் சென்றிருந்தேன். அதை இடித்து லக்ஷக்கணக்கான ரூபிள்கள் செலவு செய்து கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அங்கிருந்த பாதிரியைப் பார்த்து, இவ்வளவு பணம் எப்படி கிடைக்கிறது என்று கேட்டேன். அதற்கு பதில் மாதா நம்பிக்கை உள்ளவர்கள் கொடையினால் இவ்வளவு பணம் வசூலாயிருக்கிறது என்று சொன்னார். டஷ் கண்டில் அனேக மசூதிகளில் ஜனங்கள் தொழுவதைக் கண்டேன். அங்கு நாங்கள் கண்ட நண்பர் அப்துல் கரீமின் தகப்பனார். சமீபத்தில் ஹஜ்யாத்திரை செய்தவர். இதை அவர் பெருமையாகச் சொன்னார். லெனின்கிராட்டில் எங்கள் வழிகாட்டி விக்டர், ஒரு மசூதியைக் காட்டி இங்குதான் இந்தோனேஷிய தலைவர் சுகர்னோ வந்தபோது தொழுதார் என்று பெருமையாகச் சொன்னார்.

வயதானவர்கள் எல்லோரும் மதத்தில் நம்பிக்கையுடன் இருக்கிறார்கள். ஆனால் புரட்சிக்குப் பிறகு பிறந்தவர்கள் தெய்வ நம்பிக்கை அற்றவர்கள். பகுத்தறிவு வாதிகள். எங்களது வழிகாட்டி அலெக்சாந்தருக்கு வயது 35. அவருக்கும் அவரது மனைவியாருக்கும் தெய்வ நம்பிக்கை கிடையாது. அவரது மாமனாருக்கு கிருஸ்தவமதத்தில் நம்பிக்கை உண்டு. அவர் தொழுவதற்குப் போகிறார். அவர் பகவத்கீதையைப் படித்திருக்கிறார். மருமகன் மூலம் அதன் ஆங்கில மொழிபெயர்ப்பு தனக்கு ஒன்று வேண்டுமென்று சொல்லி அனுப்பினார்.

நான் டஷ் கண்டிலிருந்து மாஸ்கோ வரும்பொழுது நமது தூதர் ஸ்ரீமேனன் அவர்கள் என்னுடன் வந்ததால் அவரை மாஸ்கோவில் சந்தித்து அவருடன் சாப்பிடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. மாஸ்கோவில் வசிக்கும் இந்தியர்கள், தூதர்காரியாலயத்தில் இருப்ப

(10-ம் பக்கம் பார்க்க)

கல்கத்தா தமிழ் எழுத்தாளர் சங்கம்

கடந்த டிசம்பர் மாதம் கல்கத்தாவில் முதலாவது அகிலஇந்திய எழுத்தாளர் மாநாட்டை மிகச் சிறந்த முறையில் நடத்திய மாநாட்டின் வரவேற்புக்குழு தலைவரும், இந்திய அரசாங்க விஞ்ஞான வளர்ச்சி கலாசாரத் தொடர்பு இலாகா அமைச்சருமான பேராசிரியர் ஹுமாயூன் கபீர் பொதுச் செயலாளர் திரு. பவானி சங்கர் முக்கோபாத்யாய ஆகியோருக்குக் கல்கத்தா தமிழ் எழுத்தாளர் சங்கம் கடந்த 20—4—58 அன்று காலை வரவேற்பு அளித்தது. விழாவிற்கு திரு. டி. எஸ். ஸீதாபதி தலைமை வகித்தார். திரு. நா. கோபால சுந்தரம் இறை வணக்கம் பாட விழாத் துவங்கியது.

சங்கப் பொதுச் செயலாளர் திரு. ப. ந. தியாகராஜன் அனைவரையும் வரவேற்றார். பின்னர் சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கச் செயலாளர் திரு. கொடுமுடி ராஜகோபாலன் அவர்கள் அனுப்பியிருந்த வாழ்த்துச்செய்தி படிக்கப்பட்டது.

திரு. ஸீதாபதி தமது தலைமை உரையில் பேராசிரியர் ஹுமாயூன் கபீர் நாட்டிற்குச் செய்து வரும் சேவையையும், வளரும் வங்கமொழி இயக்கத்திற்கு அவர் செய்து வரும் தொண்டையும்விரிவாக எடுத்துக் கூறி பேராசிரியரையும், திரு. பவானி சங்கரையும் அறிமுகப்படுத்தி வைத்தார். மேலும் பேசுகையில் தமிழகத்திற்கும் வங்கத்திற்கும் கலாசாரத் துறையிலும். இலக்கியத் துறையிலும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு என்றும், அந்தத் தொடர்பு இச்சங்கம் மூலம் இன்னும் உறுதியாகிறது என்றும் திரு, ஸீதாபதி குறிப்பிட்டுவிட்டு, முதன் முறையாக அகில இந்திய எழுத்தாளர் மாநாட்டை வங்கத் தலைநகரில் சிறப்பாக நடத்திய அறிஞர்கள், நிகழும் ஆண்டு சென்னையில் நடைபெறவிருக்கும் இரண்டாவது அகில இந்திய எழுத்தாளர் மாநாட்டுக்கு தமது பூரண ஒத்துழைப்பை அளித்து அம் மாநாட்டை வெற்றியுடன் நடத்தத் துணை புரிய வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

கல்கத்தா தமிழ் மாணவர் மன்றம், கார்டன் ரீச் தென்னிந்திய இலக்கியச் சங்கம் ஆகிய ஸ்தாபனங்களின் சார்பில் பிரதம விருந்தினர்களுக்கு மாலை அணிவிக்கப்பட்டது.

திரு. பவானி சங்கர் முக்கோபாத்யாய பேசும்போது, உலகத்தின் மிகப் பழைய மொழிகளில் ஒன்றான தமிழ் மொழியில் செறிந்து கிடக்கும் பண்டை இலக்கிய நூல்களையும், வளரும்தமிழிலுள்ள சிறந்த இலக்கிய சிருஷ்டிகளையும் வங்க மக்கள் படித்து அனுபவிக்கும் வண்ணம் அவைகளை ஆங்கிலத்திலும் வங்காளியிலும் மொழி பெயர்த்து அளிக்க கல்கத்தா தமிழ் எழுத்தாளர்களும், தமிழ் நாட்டிலுள்ள தமிழ் எழுத்தாளர்களும் ஆவன செய்ய வேண்டுமென கேட்டுக் கொண்டார். அகில இந்திய எழுத்தாளர் மாநாட்டில் தமிழ்ப் பிரதிநிதிகள் பெருவாரியாக வந்திருந்து உற்சாகமாகக் கலந்து கொண்டு மாநாடு வெற்றிகரமாக நடைபெறத் துணை புரிந்தார்களெனக் குறிப்பிட்டு தமிழ் எழுத்தாளர் பிரதிநிதிகளை வெகுவாகப் பாராட்டி நன்றி செலுத்தினர். திரு. முக்கோ பாத்யாய.

பேராசிரியர் ஹுமாயூன் கபீர் பேசும் போது கல்கத்தா தமிழ் எழுத்தாளர் சங்கம் செய்து வரும் சேவையை வெகுவாகப் பாராட்டிவிட்டு, பாரத நாட்டின் பல்வேறு மக்கள் ஒன்றி ஒற்றுமைப் பட்டு முன்னேற்றத் தேவையான இலக்கியங்களைப் படைக்க வேண்டும். இன்றைய எழுத்தாளர்கள் எனக் கேட்டுக் கொண்டார். இன்று தேசிய ஒற்றுமையை உண்டாக்க எழுத்தாளனால் தான் இயலும் என்றும் அதை இன்றைய எழுத்தாளர்கள் புனிதப் பணியாகக் கருதி இப் பெரும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் பேராசிரியர் கபீர் குறிப்பிட்டார். மேலும் பேசுகையில் பேராசிரியா கபீர் குறிப்பிட்டதாவது "தமது தாய் மொழியைத் தவிர வேறு ஒரு பிராந்திய இந்திய மொழியால் பாண்டித்யம் பெறுவது, பிற மொழிகளிலுள்ள இலக்கியச் செல்வங்களை மொழி பெயர்ப்பது, தமது மொழியிலுள்ள உயர்ந்த இலக்கியச் சிருஷ்டிகளை பிற மொழிகளில் தருவது ஆகியவை மூலம் கலாசாரத் துறையில் உயர்ந்த ஒற்றுமைப் பணியை சாதிக்க மிகவும் துணை புரியும்."

சாகித்ய அகடமியின் திட்டங்களைப்பற்றிப் பேசும் போது அமைச்சர் குறிப்பிட்டதாவது: ஒவ்வொரு மொழியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 நூல்களை பிற 15 இந்திய மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிடத் திட்டமிட்டிருக்கிறது சாகித்ய அகடமி. இந்திய அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட 14 மொழிகளைத் தவிர ஆங்கிலம், சிந்தி ஆகிய இரு மொழிகளையும் இத்திட்டத்தில் சாகித்ய அகடமி ஏற்றுக் கொண்டுள்ளது. ஒரே சமயத்தில் எல்லா இந்திய மொழி இலக்கியங்களும் வளம் பெற சாகித்ய அகடமியின் திட்டம் மிகத் துணைபுரியும். இது விஷயத்தில் தமிழ் எழுத்தாளர் சங்கம் போன்ற ஸ்தாபனங்கள் குறிப்பிடத் தக்க முறையில் அகடமியுடன் ஒத்துழைக்கலாம்.

பொதுச் செயலாளர் திரு. ப. ந. தியாகராஜன் நன்றி கூற விழா இனிது முடிந்தது.

கூட்ட ஆரம்பத்தில் எல்லோரும் ஒரு நிமிடம் மௌனமாக எழுந்து நின்று, முதல் நாள் காலமான பிரபல வங்க நாவலாசிரியை திருமதி அனுரூப தேவி அவர்களுக்கு வணக்கம் தெரிவித்தனர்.

★

20—4—58ஞாயிற்றுக்கிழமை பம்பாய் தமிழ் எழுத்தாளர் சங்கச் செயலாளர் திரு பி. வி. வெங்கடராமன் (பாரதீயன்) அவர்களுக்குக் கல்கத்தா தமிழ் எழுத்தாளர் சங்க ஆதரவில் வரவேற்பளிக்கப்பட்டது. கூட்டத்திற்குத் தலைமை வகித்த திரு. பாரதீயன் அவர்களை வரவேற்று அவர் செய்து வரும் தமிழ்த்தொண்டை வெகுவாகப் பாராட்டினர்.

திரு. பாரதீயன் தமது உரையில் பம்பாய் தமிழ் எழுத்தாளர் சங்கம் செய்து வரும் பணியைப் பற்றி விரிவாக எடுத்துக் கூறினர்.

பின்னர் கூடியிருந்த எழுத்தாளர்கள் தற்காலத் தமிழ் இலக்கியம், இன்றைய எழுத்தாளர்களின் நிலை ஆகியவைபற்றி திரு. பாரதீயன் அவர்களுடன் கருத்தும் பரிவர்த்தனை செய்து கொண்டனர்

பின்னர் பொதுச் செயலாளர் திரு. ப. ந. தியாகராஜன் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

(…பக்கம் தொடர்ச்சி)

…தான் என்று நினைத்தேன். …செயலாக உம்ரனீகர் என்ற …ராஷ்டிர இளைஞரைக்கண்ட… ஒரு அதிசய மூட்டும் செய்தி …ச் சொன்னார். மாஸ்கோவில் …தர் காரியாலயத்திலிருப்பவர் …ளைத் தவிர, நூறு இந்தியர்கள் இருப்பதாகவும், அவர்கள் எல்லாரும் மாஸ்கோ வானொலி நிலையம், சர்வகலாசாலை, அன்னிய மொழி புஸ்தக வெளியீட்டு நிலையம் இவைகளில் வேலை பார்க்கிறார்கள் என்றும் சொன்னார். இவரும் அங்கு வேலை பார்ப்பவர். அவர் அன்று சாயந்திரம் அங்கு நடக்கும் ஹிந்துஸ்தான் சங்கக்கூட்டத்திற்கு என்னை அழைத்தார். நானும் வர சம்மதித்தேன்.

அவர் சாலையில் காத்திருப்பதாகச்சொன்னதால் சரியாக இடத்தைக்கேட்டுத் தெரிந்து கொள்ளவில்லை. ஆனால் நான் அவர் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே சென்றதால் அவர் அங்கு வரவில்லை. கட்டடம் தெரியாமல் சாலையில் நின்று கொண்டிருக்கும்போது மிடுக்காக மீசை வைத்துக்கொண்டு துரித நடையுடன் ஒரு இளைஞர் வந்து கொண்டிருந்தார். நான் வருபவர் ஜார்ஜியனா அல்லது ஆர்மினியனா என்று யோசித்துக் கொண்டிருக்கும்பொழுது அருகில் வந்ததும் அவர் கையில் ரஸிகமணி டி. கே. சியின். கம்பர் தரும் ராமாயணத்தைக் கண்டேன். அவர் தமிழர் என்று அறிந்து தமிழில் வழி கேட்கவும் அவருக்கே ஆச்சரியத்தைக் கொடுத்தது. அந்த நண்பர் நாகர்கோவிலிலிருந்து ரஷ்யா வந்திருக்கும் ஸ்ரீமான் மணி. கூட்டம் நடக்கும் இடத்திற்குச் சென்று எல்லோரையும் கண்டு பேசினேன்.

அந்நிய மொழி புஸ்தக வெளியீட்டு நிலையத்தில் பல தமிழர்கள் இருக்கிறார்கள். ரஷ்ய புஸ்தகங்களைப் பிறமொழிகளிலும் பிற மொழி புத்தகங்களை ரஷ்ய மொழியிலும் மொழி பெயர்ப்பதே இதன் நோக்கம். துளசி ராமாயணம், மஹாபாரதம், காளிதாஸரின் கவிதைகள், நேருவின் புத்தகங்கள், பிரேம்சந்தின் கதைகள், தாகூரின் கவிதைகள், தமிழ் சிறுகதைகள் இவைகளை ரஷ்ய மொழியில் வெளியிட்டிருக்கிறார்கள். சிலப்பதிகாரம் முதலிய காப்பியங்களையும் வெளியிடப் போகிறார்கள். இங்கு வேலை பார்க்கும் இந்தியர்களுக்கு 3500 ரூபிள் முதல் 6000 ரூபிள்கள் வரை சம்பளம் கிடைக்கிறது. ஆனால் இவர்கள் மாதத்திற்கு 350 ரூபாய்தான் இந்தியாவுக்கு அனுப்பமுடியும். இவர்களுக்கு அழகிய சிறு வீடுகள் கொடுத்திருக்கிறார்கள். அவைகளுக்கு வாடகை மாதம் ஒன்றுக்கு 120 ரூபிள்தான். மாஸ்கோ ரேடியோவிற்காக என்னை பேட்டி காண வந்தவர் ஜயஸ்வால் என்ற இந்தியர். மாஸ்கோ பத்திரிகைகளுக்காக என்னைக் காணவந்தவர், சங்கர் கவுர் என்ற பஞ்சாபி இளைஞர். ஒரு நாள் செஞ்சதுக்கத்தில் நாகப்பட்டினத்திற்கு அருகில் இருக்கும் தலைஞாயிலிருந்து படிக்க வந்திருக்கும் ஒரு இளைஞனைக் கண்டேன்.

என்ன இப்படி பேசிக் கொண்டே போகிறானே ஸ்புட்னிக்கைப்பற்றி ஒரு வார்த்தைக் கூட சொல்லவில்லையே என்று நேயர்கள் முணுமுணுப்பது, எனக்குக் கேட்கிறது. கட்டாயம் அதைப்பற்றி சொல்லாமலிருக்க முடியாது. ஏனெனின் ஸ்புட்னிக்கால்தான் என் மாஸ்கோ பிரயாணத்தை என் நண்பர்கள் மதித்தார்கள்.

நான் மதராஸில் ஒரு நண்பரிடம் மாஸ்கோ செல்வதற்கு முன் விடை பெற்றுக்கொள்வதற்குச் சென்றேன். அவர் பல மேல் நாடுகளுக்கு சென்றவர். முதல் முதல் வெளிநாடுகளுக்குச் செல்லும் நான் மாஸ்கோவிற்குச் செல்வது அவ்வளவு கௌரவம் இல்லை என்பது அவர் அபிப்பிராயம். அதைத் தைரியமாக என்னிடம் சொல்லவும் செய்தார்.

நான் மதராஸிலிருந்து டில்லி கிளம்பினதும் ஸ்புட்னிக் ரஷ்யாவைவிட்டு வானவெளியில் கிளம்பினது. இதனால் டில்லியிலேயே ரஷ்யா செல்லும் எனக்கு அதிக மரியாதை ஏற்பட்டது. நான் திரும்பி வந்ததும் அதே மதராஸ் நண்பர் ரஷ்யா சென்று திரும்பிய என்னிடம் ரஷ்யா செல்லாமலேயே ரஷ்யர்களின் விஞ்ஞான அறிவையும் அபார சக்தியையும் புகழ்ந்தார்.

மாஸ்கோவிலிருந்து காபூலுக்கு திரும்பி வரும்போது ரஷ்யாவின் காபூல் தூதர் என்னுடன் பிரயாணம் செய்தார். அப்பொழுது அவர் ரஷ்யா செயற்கைச் சந்திரனை வானவெளியில் விட்டதால் மாத்திரம் பெருமை அடையவில்லை. ஸ்புட்னிக் என்ற வார்த்தை உலகம் முழுவதும் உபயோகப்படுத்தப்படுவதைப் பற்றி பெருமை அடைந்தார்.

நான் ஸ்புட்னிக் கிளம்பின உடனேயே ரஷ்யா சென்றதால் அந்த வார்த்தையின் அர்த்தம் ரஷ்யாவில் மாத்திரம் புரியும் என்று நினைத்தேன். ஆனால் திரும்பி திருச்சி வந்ததும் தமிழ் தவிர வேறு பாஷை தெரியாத என்பத்து வயது பையன் சீனு 'நீ ரஷ்யாவில் ஸ்புட்னிக்கைப் பார்த்தாயா?'' என்று கேட்டதும்தான் ரஷ்ய தூதர் சொன்ன வாக்கியத்தின் அர்த்தம் புரிந்தது. நானும் அதனால்தான் தைரியமாகத் தமிழ் பண்டிதர்களின் கோபத்திற்கும் பயப்படாமல் ஸ்புட்னிக் என்ற வார்த்தையையே உபயோகித்து இருக்கிறேன்.

இன்றும் ரஷ்யாவைப்பற்றி எவ்வளவோ சொல்லலாம். தற்செயலாக மணியைப் பார்த்தேன். இனிமேல் பேச்சை முடிக்க வேண்டியதுதான். நேயர்களிடம் விடைபெற்றுக்கொள்கிறேன்.

(வானொலிப் பேச்சு அனுமதி பெற்றது.)

2-ம் பக்கம் தொடர்ச்சி

கின்றன. நான் மாத்திரம் அதற்கு விதிவிலக்கா? ஒருக்கால் கிரஷ் குடிக்கக் கடைக்குச் சென் றிருக்கிருனே? என்று சிந்தித்தப் படி முகம் கூட அலம்பாமல் அமர்ந்திருந்தேன். என் சிந்தனைப் பறவை ஏமாற்றமென்ற குகைக் குள்ளிருந்து வெளிவரத் தெரி யாது திணறிக் கொண்டிருந்தது. மணி ஆறு அடித்து விட்டது. அம்புஜம் டிப்டாப்பாக உடுத்து என் ரமா! இன்னும் தயாராக வில்லே? என்று கேட்டாள்.

சுரேந்தர் வெளியில் சென் றிருக்கிருன். இன்னும் வர வில்லை என்னும் போதே.

நீ அவர் அழைத்துப் போகி ருர் என்ருயே! அவர் அவர் காதலி வீட்டுக்குள் நுழைந்ததை பார்த்தேனே! என்ருள்.

என் மெல்லிய மனதில் விரி சல் கண்டது. வேதனை ஒலி என் இதயத்தினடியிலிருந்து எழும்பியது. யாரிடம் சொல் வது. மனதிலேயே அடக்கிக் கொண்டேன். அம்புஜம்! என் உன்னுடன் பேசிக் கொண் டிருந்த போது அவள் அவனு டன் அறையில் பேசிக் கொண் டிருந்தாள். என்ன சொல்லிச் சென்ருளோ? சிறிசுகள் அவர் கள். திருமண நாளும் அன்றைய வரவேற்பும் அவர்கள் நினைப்பை கிறுகிறுக்கச் செய்திருக்கும், என்று என் வாய் பேசினுலும் உள்ளம் குமுறியது. என் காதலியுடன் நான் படம் பார்க்கச் செல்கிறேன். நீங்கள் போய் வாருங்கள் என்று சொல்லக் கூடாதா? நான் எங்கோ போகி றேன். எங்கும் போவதில்லை... அப்பா! அற்ப விஷயத்திற்கு நம் பிக்கை அத்திவாரச் சொற்களைப் போட்டு, அதன் மேல் ஏமாற்ற உருவமா? பூ! ஆசையும் அன்பும் சமாதி செய்தால் அந்த இடத்தில் துன்பம் தான் விளையுமா? என் மன உளைச்சலை எழுத்தால் எழுத முடியாது, அனுபவித் தால்தான் தெரியும். நான் உணர்ச்சியற்று வீற்றிருப்பதை பார்த்து அம்புஜம்,

புறப்படு ரமா! நாம் போக லாம். காட்டுப்பட்டி மேல் போனல் தெளலாபாத் வரும். அங்கு தான் திருமணம் நடக்கின் றது. என்ருள்.

சுந்தர் வனத்திற்கு அடுத்த திருப்பத்தில்கலியாணவீடென்று சுரேந்தர் சொன்னுனே! எனக் கோ வழி தெரியாது. நீ எப்படி அழைத்துச் சென்ருலும் சரி. அவன் சொன்ன வழிதான் சுலப மாய் படுகிறது என்றேன்.

சரி. அப்படியே போகலாம் என்ருள் அம்புஜம். எனக்கு வேதனை சகிக்க முடியவில்லை. அழுகை அழுகையாய் வந்தது.

அம்புஜம்! கலியாணத்திற்கு போகாவிட்டால் தான் என்ன? கலியாணமெல்லாம் ஆனபின் ஒரு நாள் அவர்கள் வீட்டில் போய்ப் பார்த்து கலியாணப் பரி சைக் கொடுத்து வந்தால் போதா தா? என்றேன்.

என் உள்ளக் குமுறலை அவளா கண்டாள். நன்ருயிருக்கிறது. திருமணத்தன்று போவது போல் ஆகுமா? இன்று தான் போக வேண்டும் என்ருள். என்னல் போகாமலும் இருக்க முடிய வில்லை. போகவும் மனம் இட மளிக்கவில்லை. என் ரத்த ஈர லில் பொங்கும் ரத்தமெல்லாம் "மன விரிசலில்" வடிந்து எங் கோ ஆழங்காணுத புண்ணில் கசிந்ததே ஒழிய உடலில் ஓட வில்லை. என் கைகால்கள் விய விலத்து ஊசலாடின. விதிலே என்று புறப்பட்டேன்.

சுரேந்தர் சொன்ன வழி சென் ருேம். ஆனல் அந்தக் கலியாண வீடு அங்கில்லை. அம்புஜம் சொன்ன வழிதான் சரியாயிருந் தது. சுந்தர் வனத்திலிருந்து தௌலாபாத் வரை சுமார் ஒரு மைல் தூரம் நடந்து சென்ருேம். திருமண வீட்டில் நுழைந்தாலும் அங்கு நடக்கும் சங்கீதக் கச்சேரி யிலோ, பரதநாட்டியத்தின் மே லோ, தேனீர் விருந்தின் பாலோ என் மனம் ஈடுபடவில்லை. என் நேசிகள் என்கையைப் பிடித்துப் பேசினுலும் பேசப்பிடிக்கவில்லை. விதியே என்று வேதனை சிரிப்பு சிரித்து, நானும் வரவேற்புக்கு வந்ததாகப் பெயர் செய்து வீட் டிற்குத் திரும்பினேன். விதி விளையாடத் தொடங்கினல் சதி செய்யத்தானு தயங்கும்?

மணிக்கணக்காய் பஸ் ஸ்டேண் டில் நின்றேன். பஸ், டேக்ஸி, அதமக்ஷபம் ஆட்டோ, ஊஹூம் நளமகாராஜன், ஹரிச்சந்திரன், இவர்கள் பட்ட இடையூறுகள் நமக்கு கொழுகொம்பாயிருக்கும் போது இது எம்மாத்திரம்? நடந் தேன், நடந்தேன். ஒவ்வொரு திருப்பத்திலும் வண்டிக்காக நின் றேன். ஏமாற்றம்தான் ஊர்ஜித மாயிற்று. ஒரு வண்டியும் வர வில்லை. எனக்குக் கோபம் கோப மாக வந்தது. முதல் ஏமாற்றம் சுரேந்தரால் ஏற்பட்டது. அதே படிப்படியாய் அதிகமாயிற்றே ஒழியவேறில்லை. எனக்கு அவன் மேல் கோபம் கொழுந்து விட்டெ ரிந்தது. அவன் வேறு எங்காகி லும் சென்றிருந்தால்......நான் அவன் மேல் என் கோபப்பட வேண்டும். வீட்டிற்கு போனதும் அவன் வந்திருந்தால்... என்று எண்ணினேன், எப்படியோ அவஸ்தைப்பட்டுக் கொண்டு வீடு வந்து சேர்ந்தேன். அங்கும் ஏமாற்றம்தான் காத்திருந்தது.

எனக்கு ஒன்றும் வேண்டி யிருக்கவில்லை. விளக்கருகில் புத்த கத்தை வைத்துக் கொண்டமர்ந் தேன். என் கையில் ... மனவிரிசலில் சிந்தனையின் ... றல். எதற்காக பச்சை குழ... யை ஏமாற்றுவது போல் என்... ஏமாற்ற வேண்டும்? அவனே ... அனைத்திற்கும் நம்பியதால் ... னே! காதலி ஏற்பட்டு விட்டா... கயத்தனம் செய்வதில் தான் களிப்போ? அவனிடம் வைத்த தூய்மை அன்பை உடைத்து விட் டானே. பளிங்கு போலிருந்த மனம் விரிசல் கண்டு விட்டதே! அசைந்தால் வலிக்கிறதே...நான் செய்த தியாகங்கள் எத்தனை? அதற்கெல்லாம் சேர்த்து அளித்த காணிக்கை இது தானு?

இரவு மணி பத்தரை. உதட் டில் வெற்றிலை சிவப்பும்; கண் களில் ஒப்பற்ற பெருமித ஒளி யும், முகத்தில் மகிழ்ச்சியும் ஒய் யார நடையுமாய் வந்த சுரேந்தர் மௌனமாய் அமர்ந்திருந்த என்னைப் பார்த்தான். என் குமு றும் உள்ளம் பேச முடியாது துடித்தது. அவன் சிறிது நே ரம் அமர்ந்திருந்து படுக்கச் சென் ருன். என் மனம் பின்னும் சீறியது.

அவன் எங்கு சென்ருனென் பதையும் சொல்லாது என்னையும் விசாரிக்காது போய் படுக்கவே அன்பைப் பயிர் செய்த என் உள் ளத் திடலில் அப்பயிரையழிக்க பூச்சி கடித்தாற்போலிருந்தது. விளக்கை பட்டென்று அணைத்து படுக்கையில் சாய்ந்து விக்கி விக்கி அழுதேன். என் உள்ளம் சமா தானமடையவில்லை. பைத்தியக் காரியைப் போல் மூலையில் ஒன்றுக் கொன்று சம்பந்தமில் லாத எண்ணச் சுழல்கள் சுழன் றன. இரவு நகரத் தொடங்கிய தே ஒழிய தூக்கம் நானிருக்கும் அறையைக் கூட எட்டிப் பார்க்க வில்லை. அவன் விளையாட்டாக செய்த சிறு காரியம் என் கண் ணுடி போன்ற மனதில் விரிசலை உண்டாக்கி விட்டது. அதன்வலி அவனுக்குத் தெரியுமா? தெய்வ மே பொறுக்க முடியவில்லையே;

(தொடரும்)

ரயூர் டி. மு. கோர்ட்
O. S. No. 51—45.
E. P. 335—57.

V. R. சுப்பிரமணிய அய்யர் —வாதி
செல்லம்மாள் வகையரு
31 to 42—பிரதிவாதிகள்

ஷை நம்பரில் டிகிரியை நிறைவேற்ற வாதி மனுக்கொடுத்து 33 முதல் 40 பிரதிவாதிகளுக்கு ஓட்டி ச்சார்வு செய்ய உத்தரவாகி 28—5—58வ ஈசங்கி வைக்கப்பட்டிருக்கிறது. ஆக்ஷேபனை உள்ளவர்கள் தெரிவித்து கொள்ளலாம்.

எஸ். லெட்சுமண அய்யர்
அட்வகேட்

1/2316/18

மாயவரம் டி. மு. கோர்ட்
O. P. 22/58

1. N. V. ராகவன்
2. அண்ணங்கராச்சாரியார் —மனுதார்கள்.

P. S. ஸ்ரீரெங்காச்சாரியார் —எதிர் மனுதார்-

ஷை மனுதார்கள் அட்வகேட் மாயவரம் V. கிருஷ்ணமூர்த்தி தீக்ஷதர் தெரிவிப்பதாவது:

கஸ்பா மாயவரம் டவுன் திருவிழந்தூர் ஸன்னதி தெருவில் ஸ்திரவாஸமாயிருந்து 19-5-55வயில் இறந்துபோன நயினச்சாரியாருக்கு வரவேண்டிய மனுவில் கண்ட ஷேர் தொகைகள் வகையறா வசூல் செய்ய ஷையார் குமாரர்களான மனுதாரர்கள் தங்களுக்கு வார்ஸ் ஸர்டிபிகேட்டு கிடைக்க வேணுமாய் மனு கொடுத்திருப்பதால் ஷை மனு விஷயமாய் ஆக்ஷேபணை உள்ளவர்கள் 14—6—58வயில் பகல் 10 மணிக்கு ஷை கோட்டில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ள வேண்டியது.

V. Krishnamurthi Dikshithar.
மனுதார்கள் அட்வகேட்.

ஆமூர் ஊர் ஆட்சி மன்ற தேர்தல்

ஆமூர் மே 1:— திருச்சி ஜில்லா ஆமூர் பஞ்சாயத்து போர்டு தேர்தல் 1ம் தேதி நடைபெற்றது கிராம மக்கள் அனைவரும் ஒன்றுகூடி பி. தங்கராஜன் முத்துராஜா, பி. மாறுசங்க மூப்பன், வி. ராஜலிங்க மூப்பன், இ. தாண்டவ மூப்பன், மூ. காளி சாம்பான், பூ. மாரிமுத்து முத்திரியர், சா. நெடுபுலி முத்திரியர், மூ. செல்லமுத்து மூப்பன் ஆ. கரிவண்ட முத்திரியர் ஆக 13 மெம்பர்கள் போட்டி இன்றி ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். புது மெம்பர்கள் 7-6-58க்கு பிறகு பதவி ஏற்பார்கள்.

———

பூமியின் வயது

பூமியின் வயது 500 கோடி ஆண்டுகளுக்கு மேல் மிகவும் அதிகமாகும். ஏனெனில் இன்று பூமியிலுள்ள உயிரினங்கள் அடைந்துள்ள வளர்ச்சிக் கட்டத்தை அடைவதற்கு குறைந்த பட்சம் 1000 கோடி வருடங்களாவது பிடித்திருக்கும். இவ்வாறு பிரபல சோவியத் பேரவை விஞ்ஞானி லெவ் ஜெங்கிவிச் கூறுகிறார்.

கடலுக்கடியிலுள்ள தாவர இனங்களையும் உயிரினங்களையும் ஆராய்ந்ததிலிருந்து இந்த முடிவு சரியானது என்று நிரூபணமாகியுள்ளது என்று அவர் கூறுகிறார். ஒவ்வொரு ஆயிரம் ஆண்டுகளிலும் கடலுக்கடியிலுள்ள தாவர இனங்கள், உயிரினங்கள் இவற்றாலான வண்டல் கடலுக்கடியில் 0·12 அங்குல ஆழத்திற்குப் படிகிறது என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்த உயிர் நூல் "கடிகாரம்", யுரேனியக் கடிகாரத்தைவிட மிகவும் துல்லியமாக காலத்தைக் குறிக்கக்கூடியது. (யுரேனிய "கடிகார"த்தின்படி பூமியின் வயது 500 கோடி ஆண்டுகள் என்று கணக்கிடப்பட்டுள்ளது).

அடுத்த சில ஆண்டுகளில் கடலுக்கடியிலுள்ள தரை பற்றி மிகவும் துல்லியமான ஆராய்ச்சிகள் நடத்தப்படும். இன்று கடலுக்கடியிலுள்ள தரையில் 98 முதல் 114 அடி தூரத்திற்குத்தான் விஞ்ஞானிகளால் ஊடுருவ முடிகின்றது. இவ்வாறு அவர்கள் ஊடுருவுவதன் மூலம், கோடானுகோடி ஆண்டுகளுக்கு முந்திய பூமியின் பண்டைய வரலாற்றிற்கே அவர்கள் பிரயாணம் செய்ய

இப்பொழுது 325 அடி வரையில் ஊடுருவுவதற்கான சாதனம் ஒன்றை தற்பொழுது விஞ்ஞானிகள் உருவாக்கிக் கொண்டிருக்கின்றனர். இதன் மூலம் 300 கோடி முதல் 400 கோடி ஆண்டுகளுக்கு முற்பட்ட பூபௌதீக சகாப்தங்களைப்பற்றி அறிய முடியும்.

ஆனால் கடலின் தரை மட்டத்தை எல்லையற்ற அளவிற்கு ஊடுருவுவதற்கான சாதனம் ஒன்றை சோவியத் விஞ்ஞானிகள் உருவாக்கி விட்டதாகவும், இந்த அற்புத சாதனம் கூடிய சீக்கிரத்தில் செயல் படத்தொடங்கும் என்றும் பேராசிரியர் லெவ் ஜெங்கிவிச் தெரிவித்தார்.

———

கடன் வழங்கும் போலிக் கம்பெனிகள்.

சில மோசடிக்காரர்களும், போலிக் கம்பெனிகளும், கடன்வழங்குவதாகப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தி, தொலை தூரங்களிலுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரி, சில்லரைச் செலவுகளுக்காக, அவர்கள் விண்ணப்பங்களுடன் அனுப்பி வைக்கும் தொகைகளைக் கையாடி வருவதாகப் போலீசார் சமீபத்தில் கண்டுபிடித்திருக்கின்றனர்.

அநேகமாய்க் கடன்களே வழங்கப்படுவதில்லை என்றும், விண்ணப்பதாரர்கள் 'சில்லரைச்செலவுகளுக்'காக விண்ணப்பமொன்றுக்கு 10 ரூபாயிலிருந்து 85 ரூபாய் வரை அனுப்புவதைப் பெற்று அதைக் கையாடி வந்துள்ளதாகவும் இந்த விசாரணைகளிலிருந்து தெரிய வந்திருக்கிறது.

இந்த நபர்கள், நேரடித் தொடர்பைத் தவிர்க்கும் பொருட்டு கடன்களுக்கு கடிதப் போக்குவரத்துக்களின் மூலமே தான் விண்ணப்பித்துக்கொள்ள வேண்டும் என்று கோருவதும், மேலும், கடிதப் போக்குவரத்துக்களில் ஏற்படும் கால தாமதத்தைப் பயன்படுத்திக்கொள்ளுவதற்காக தொலை தூரங்களிலுள்ளவர்களிடம் மட்டிலுமே தொடர்பு கொண்டு வரு